# ANNAI VAILANKANNI ARTS AND SCIENCE COLLEGE

Owned and managed by "Diocese of Tanjore Society" (Regd. No. S.8 of 1958)
(Affiliated to Bharathidasan University, Tiruchirappalli - 24)
**Accredited with A+ Grade by NAAC – 1st Cycle.**
Bishop Sundaram Campus, Pudukottai Road, Thanjavur – 613007.

Ref.No.Circular/0171/AVASC/TNJ/ 2024 Dt.14.10.2024

மாணவ, மாணவியர்கள் கவனத்திற்கு,

தமிழ்நாடு அரசின் ந.க.எண்.1463/2024/ம8 நாள்.03.10.2024 மற்றும் ந.க.எண்.டி7/2272/2022 நாள்.07.10.2024 படி 2024-2025, 2023-2024 மற்றும் 2022-2023 கல்வியாண்டில் சேர்க்கை பெற்று தற்போது படித்துவரும் பிற்படுத்தபட்ட மாணவர்கள், ஆதிதிராவிட மாணவ, மாணவிகள் அனைவரும் புதிதாக விண்ணப்பிப்பவர்களும் மற்றும் ஏற்கனவே விண்ணப்பித்து இக்கல்வியாண்டில் தங்களின் விண்ணப்பங்களை புதுப்பிப்பவர்களும் தங்கள் கைபேசி மூலமாக போஸ்ட் மெட்ரிக் ஸ்காலர்ஷிப்-ற்கு (BC, SC, ST Students) விண்ணப்பிக்கலாம் என்று அரசாங்கத்தின் மூலமாக அறிவுறுத்தபட்டுள்ளது. ஆகவே, மாணவ, மாணவிகள் தங்கள் கைபேசி மூலமாக மட்டும் விண்ணப்பிக்க கல்லூரி சார்பாக அறிவுறுத்தப்படுகிறார்கள்.

கீழ்கண்ட வழிமுறைகளை பின்பற்றி விண்ணப்பிக்க கேட்டுக்கொள்ளப்படுகிறீர்கள்:

1. தங்களின் தொலைபேசியில் Playstore-ல் சென்று NSP OTR செயலியை பதிவிறக்கம் செய்து கொள்ளவும்.

2. பிறகு NSP OTR செயலிற்கு சென்று தங்களின் விவரங்களை முதலில் பதிவு (Register) செய்து கொள்ள வேண்டும்.

3. பிறகு Login பகுதிற்கு சென்று தங்களின் User Name மற்றும் Password உள்ளீடு செய்து தங்களின் விண்ணப்பங்களை Apply Scholarship-ல் (Apply Now) விண்ணப்பம் செய்யவும்.

குறிப்பு :

* கண்டிப்பாக விண்ணப்பதாரர்களின் தொலைபேசி எண், ஆதார் எண் மற்றும் வங்கி கணக்கு எண் அனைத்தும் இணைத்து இருக்க வேண்டும் (Seeded). அவ்வாறு இல்லாத பட்சத்தில் தங்களால் விண்ணப்பிக்க இயலாது.
* தங்கள் விண்ணப்பித்த பிறகு வரும் வருகை பதிவு சான்றிதழை பதிவிறக்கம் செய்து முதல்வரிடம் கையொப்பம் பெற்று திரும்ப பதிவேற்றம் செய்ய வேண்டும்.
* பருவத்தேர்வு கட்டணம் செலுத்திய ரசீது (Semester Fees Receipt)
* கடைசி பருவத்தின் மதிப்பெண் சான்று (முதல்வர் கையொப்பமுடன்)
* வருமான சான்று (நடப்பு ஆண்டில் இருக்க வேண்டும்).

P. Carmel Mary 14/10/2024

முதல்வர்

FOR PRINCIPAL
Annai Vailankanni Arts and Science College
BishopSundaramCampus,
Pudukkottai Road, Thanjavur - 7.

| அனுப்புனர் | பெறுநர்: |
|---|---|
| திரு.மு.ரவிச்சந்திரன் M.Sc.,PGDCA., மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர் தஞ்சாவூர். | கல்லூரி முதல்வர், c-35829 Annai Vailankanni Arts and Science College Thanjavur |

ந.க.எண்.1463/2024/ம8, நாள்:03.10.2024.

for 14/10/2024

பொருள்: ஆதிதிராவிடர் நலம் - தஞ்சாவூர் மாவட்டம் - கல்வி உதவித்தொகை- 2024-2025 ஆம் கல்வியாண்டு - போஸ்ட் மெட்ரிக் கல்வி உதவித்தொகை திட்டம் (SC) செயல்படுத்துவதற்கான ஒரு முறை பதிவு (OTR) தொகுதி (Module) - மாணாக்கர்கள் மற்றும் கல்வி நிறுவனங்கள் - NSP இணையதளத்தில் பதிவு செய்வது - வழி முறைகள் தெரிவித்தல் - தொடர்பாக.

பார்வை: ஆதிதிராவிடர் நல இயக்குநர் அவர்களின் கடித ந.க.எண்.எல்.1/309/2024, நாள்:16.09.2024.

......

பார்வையில் காணும் கடிதத்தின்படி 2024-2025 ஆம் கல்வியாண்டில் போஸ்ட் மெட்ரிக் கல்வி உதவித் தொகை திட்டத்தில் (SC) செயல்படுத்துவதற்கான ஒரு முறை பதிவு (One Time Registration) தொகுதி (Module) சமூக நீதி மற்றும் அதிகாரமளித்தல் அமைச்சகத்தால் தற்போது கட்டாயமாக்கப்பட்டுள்ளது. NSP இணையதளத்தில் மாணாக்கர்கள் சேவைகளை பெற வேண்டுமெனில் ஒரு முறை பதிவு செயல்முறையை சீரமைக்க வழங்கப்படும் தனித்துவமான எண் மாணாக்கர்களின் கைப்பேசி எண்ணுடன் பதிவு செய்து முழு e-KYC செய்து முடிக்க வேண்டும். இந்த செயல்முறை முடிந்ததும் OTR எண் உருவாக்கப்பட்டு பயனரின் தொலைபேசிக்கு அனுப்பப்படும். இந்த தனித்துவமான எண் மாணாக்கர்கள் NSP இணையதளத்தில் பயன் பெற மீண்டும் மீண்டும் பதிவு செய்யாமல் பல்வேறு சேவைகளை அணுக அனுமதிக்கிறது. இவ்வெண் மாணாக்கர்கள் படிப்புகாலம் முழுவதும் செல்லுபடியாகும்.

அதன்படி Scheduled Castes, Scheduled Castes converted to Christianity மாணாக்கர்கள் பதிவு செய்து ஒரு முறை பதிவு (OTR) எண் பெறுவதற்காக பின்பற்ற வேண்டிய நடைமுறையினை இணைப்பில் கண்டுள்ள Annexure-1 தெரிவிக்கப்பட்டுள்ளது. இதை பின்பற்றி மேற்காண் மாணாக்கர்கள் ஒரு முறை பதிவு எண் பெறுவது அவசியமானதாகும்.

மேலும், ஒவ்வொரு கல்வி நிறுவனங்களின் தலைவர்கள் / முதல்வர்கள் Head of Institution (HOI)மற்றும் தொடர்பு அலுவலர்களும் Institution Nodal Officer (INO) NSP இணையதளத்தில் அவசியம் பதிவு செய்ய வேண்டும். முதலில் HOI / INO ஆகியோர் அவரவர்களின் உள்நுழைவில் Id மற்றும் Password கொண்டு உள்நுழைய வேண்டும். பயோமெட்ரிக் அங்கீகாரத்தை தொடர்வதற்கு முன் HOI / INO ஆகியோர் அவரவர் சுயவிவர புதுப்பித்தல் செய்யப்பட வேண்டும்.

இந்நேர்வில், ஏற்கெனவே NSP இணையதளத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள HOI / INO மாற்றப்பட்டால் அல்லது பதிவு ஏற்கெனவே பதிவு செய்யப்பட்டவர்களின் ஆதார் விவரங்களில் ஏதேனும் மாற்றம் தேவைப்பட்டால், அவர்கள் பயோமெட்ரிக் அங்கீகாரத்தைத் தொடர்வதற்கு முன், ஆதார் விவரங்களை அந்தந்த உள்நுழைவில் புதுப்பித்தல் அவசியம். அவ்வாறு மேற்கொள்ளப்படும் HOI / INO புதுப்பித்தல் ஆதார்விவரங்கள் DNO- District Nodal Officer ஆல் புதுப்பிக்கப்படும். புதுப்பித்தல் ஏதும் இல்லையெனில் Final Submit என்ற பொத்தானை அழுத்தி விவரங்களை சமர்ப்பிக்க வேண்டும். பயோமெட்ரிக் அங்கீகாரத்தை முதலில் HOI செய்ய வேண்டும், பின்னர் INO செய்ய வேண்டும்.

மேற்சொன்னவாறு NSP இணையதளத்தில் மாணாக்கர்கள் மற்றும் கல்வி நிறுவனங்கள் பதிவு செய்வது குறித்த வழிமுறைகள் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. 2024-2025 ஆம் கல்வியாண்டில் மத்திய அரசின் 60% பங்கீட்டு தொகையை பெறவேண்டுமெனில் மேற்காண் வழி முறைகளைபின் பற்றி உடனடியாக பதிவு செய்யுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

இணைப்பு: வழிமுறைகள்

3.10.24

மாவட்டஆதிதிராவிடர்மற்றும்
பழங்குடியினர்நலஅலுவலர்,
தஞ்சாவூர்.

செ.கு.
3/10/2024

ஆதிதிராவிடர் நல இயக்குநரகம்

அனுப்புநர்

திருத.ஆனந்த், இ.ஆ.ப.,
இயக்குநர்,
ஆதிதிராவிடர் நலத்துறை,
சேப்பாக்கம்,
சென்னை - 05

பெறுநர்

மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும்
பழங்குடியினர் நல அலுவலர்,
அனைத்து மாவட்டங்கள்

ந.க. எண் எல்1 / 309 / 2024, நாள். 16 .09.2024

அய்யா / அம்மையீர்,

பொருள்: ஆதிதிராவிடர் நலம் - கல்வி உதவித் தொகை - 2024 - 2025 ஆம் கல்வியாண்டு - போஸ்ட் மெட்ரிக் கல்வி உதவித் தொகை திட்டம் (SC) செயல்படுத்துவதற்கான ஒருமுறை பதிவு (OTR) தொகுதி (Module) - மாணாக்கர்கள் மற்றும் கல்வி நிறுவனங்கள் - NSP இணையதளத்தில் பதிவு செய்வது - வழிமுறைகள் தெரிவித்தல் - தொடர்பாக

பார்வை: சமூக நீதி மற்றும் அதிகாரமளித்தல் அமைச்சக கடிதம் எண் K-11011/2/2021-SCD-V-Part(1) நாள் 31.07.2024

...........

பார்வையில் காணும் அமைச்சக கடிதத்தில் 2024 - 2025 ஆம் கல்வியாண்டில் போஸ்ட் மெட்ரிக் கல்வி உதவித் தொகை திட்டத்தில் (SC) செயல்படுத்துவதற்கான ஒருமுறை பதிவு (One Time Registration) தொகுதி (Module) சமூக நீதி மற்றும் அதிகாரமளித்தல் அமைச்சகத்தால் தற்போது கட்டாயமாக்கப்பட்டுள்ளது. NSP இணையதளத்தில் மாணாக்கர்கள் சேவைகளை பெற வேண்டுமெனில் ஒருமுறை பதிவு (OTR - One Time Registration) என்பது பதிவு செயல்முறையை சீரமைக்க வழங்கப்படும் தனித்துவமான எண். மாணாக்கர்கள் கைப்பேசி எண்ணுடன் பதிவு செய்து முழு e-KYC செய்து முடிக்க வேண்டும். இந்த செயல்முறை முடிந்ததும் OTR எண் உருவாக்கப்பட்டு பயனரின் தொலைபேசிக்கு அனுப்பப்படும். இந்த தனித்துவமான எண் மாணாக்கர்கள் NSP இணையதளத்தில் பயன்பெற மீண்டும் மீண்டும் பதிவு செய்யாமல் பல்வேறு சேவைகளை அணுக அனுமதிக்கிறது. இவ்வெண் மாணாக்கர்கள் படிப்பு காலம் முழுவதும் செல்லுபடியாகும்.

அதன்படி Scheduled Castes, Scheduled Castes converted to Christianity மாணாக்கர்கள் பதிவு செய்து ஒருமுறை பதிவு (OTR) எண் பெறுவதற்காக பின்பற்ற வேண்டிய நடைமுறையினை இணைப்பில் கண்டுள்ள Annexure - 1ல் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதை பின்பற்றி மேற்காண் மாணாக்கர்கள் ஒருமுறை பதிவு எண் பெறுவது அவசியமானதாகும்.

மேலும், ஒவ்வொரு கல்வி நிறுவனங்களின் தலைவர்கள் / முதல்வர்கள் Head of Institution (HOI) மற்றும் தொடர்பு அலுவலர்களும் Institution Nodal Officer (INO) NSP இணைய தளத்தில் அவசியம் பதிவு செய்ய வேண்டும். முதலில் HOI / INO ஆகியோர் அவரவர்களின் உள்நுழைவில் Id மற்றும் Password கொண்டு உள்நுழைய வேண்டும். பயோ மெட்ரிக் அங்கீகாரத்தை தொடர்வதற்கு முன் HOI / INO ஆகியோர் அவரவர் சுயவிவர புதுப்பித்தல் செய்யப்பட வேண்டும்.

இந்நேர்வில் ஏற்கனவே NSP இணைய தளத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள HOI / INO மாற்றப்பட்டால் அல்லது பதிவு ஏற்கனவே பதிவு செய்யப்பட்டவர்களின் ஆதார் விவரங்களில் ஏதேனும் மாற்றம் தேவைப்பட்டால், அவர்கள் பயோ மெட்ரிக் அங்கீகாரத்தைத் தொடர்வதற்கு முன், ஆதார் விவரங்களை அந்தந்த உள்நுழைவில் புதுப்பித்தல் அவசியம். அவ்வாறு மேற்கொள்ளப்படும் HOI / INO புதுப்பித்தல் ஆதார் விவரங்கள் DNO - District Nodal Officer ஆல் புதுப்பிக்கப்படும். புதுப்பித்தல் ஏதும் இல்லையெனில் Final Submit என்ற பொத்தனை அழுத்தி விவரங்களை சமர்பிக்க வேண்டும். பயோ மெட்ரிக் அங்கீகாரத்தை முதலில் HOI செய்ய வேண்டும், பின்னர் INO செய்ய வேண்டும்.

மேற்சொன்னவாறு NSP இணையதளத்தில் மாணாக்கர்கள் மற்றும் கல்வி நிறுவனங்கள் பதிவு செய்வது குறித்த வழிமுறைகள் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. 2024 -2025 ஆம் கல்வியாண்டில் மத்திய அரசின் 60% பங்கீட்டு தொகையை பெற வேண்டுமெனில் மேற்காண் வழிமுறைகளை பின்பற்றி உடனடியாக பதிவு செய்ய அனைத்து கல்லூரிகளை அறிவுறுத்துமாறு தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

ஒம்/- த. ஆனந்த்.

ஆதிதிராவிடர் நல இயக்குநர்

ஆதிதிராவிடர் நல இயக்குநருக்காக.

16/09/24

இணைப்பு மேற்படி

# 2024-2025 POST MATRIC SCHOLARSHIP OTR STEP BY STEP REGISTRATION PROCESS IN NATIONAL SCHOLARSHIP PORTAL[ NSP]

| | |
|---|---|
| **Step 1** | Go to below Link and read the Scheme Guidelines https://scholarships.gov.in/otrapplication/#/ |
| **Step 2** | Complete the Mobile Number Registration process with OTP and Captcha |
| **Step 3** | Aadhaar Verification - Phase 1 [ Aadhaar Linked Mobile Number- Once verification completed you will receive Reference Number . Eg- R24-00111****] |
| **Step 4** | Aadhaar Verification - Phase 2 [ Face Authentication- Go to Playstore, download NSP OTR App & Aadhaar Face RD Mobile App . Use the above received reference number ( R24-00111****) and complete the eKyc- face authentication through mobile.] |
| **Step 5** | Once all the verification process completed, the OTR [ One Time Registration ] Number & Password will be sent to the registered Mobile number. |
| **Step 6** | Use the OTR number and password in the NSP login. |